NEW INDIAN EXPRESS – 17.02.2012

# Keep Updating Yourself, VC Tells Students




Bharathiar University Vice-Chancellor C Swaminathan presenting degree to a student at the Graduation Day function held in Hindusthan College of Arts and Science, Coimbatore | Express

**Express News Service**

**Coimbatore:** In a globalised world, people look for standard and quality, so keep on updating yourself, C Swaminathan, Vice-Chancellor of Bharathiar University advised students here on Thursday.

He was delivering the graduation address at the Hindusthan College of Arts and Science here.

"An employee who does not update his or her knowledge will become an outdated employee. Basic academic skills, higher order of thinking skills and professional qualities are the three important prerequisites for students to get a placement. But many students are struggling in English," he said.

"Follow your passion, success will come searching for you. Young people have the responsibility to take the country forward to the zenith of success. We should not allow foreigners to explore our resources and get patents. You should try to get the patent," he added.

"In my school days we used to gift fruits to our teachers, but now students are giving murder weapons to their teacher, he said recalling the recent incident of a teacher being stabbed to death by a 15-year-old boy in the classroom. "Students must learn to show affection and love to their fellow human beings. Moral and ethical education plays an important role in this," he said.

"Quality of education keeps on improving. Ability, capability and competence are three important characters which a student should possess. Industries are looking for more skilled individuals," he pointed out.

T S R Khannaiyann, Chairman of Hindusthan Educational and Charitable Trust, presided over the graduation day function. Sarasumathi Khannaiyann, Secretary of the trust and N Baluswami, Principal of Hindusthan College of Arts and Science also spoke.

DINAMANI – 17.02.2012

# நமது வளங்களுக்கு வெளிநாட்டினர் காப்புரிமை பெறுவதை மாணவர்கள் முறியடிக்க வேண்டும்

கோவை, பிப். 16: நம் நாட்டில் உள்ள வளங்களுக்கு வெளிநாட்டினர் காப்புரிமை பெறும் நிலையை மாணவர்கள் முறியடிக்க வேண்டும் என்று, பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சுவாமிநாதன் தெரிவித்தார்.

கோவை, நவஇந்தியாவில் உள்ள இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கி பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சுவாமிநாதன் பேசியது:

உலகில் அனைத்துத் துறைகளிலும் போட்டி நிலவுகிறது. எனவே, புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதேபோல ஊழியர் தன்னுடைய துறை சார்ந்த விஷயங்களைத் தெரிந்திருப்பது அவசியம். இல்லையெனில் அவர் அந்த வேலைக்கு உரிய நபராக இருக்க முடியாது.



கோவை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் வியாழக்கிழமை நடந்த பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்குகிறார், பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சுவாமிநாதன்.

போட்டி நிறைந்த உலகில் தொழில் நிறுவனங்களும், சிறந்த புத்திக் கூர்மையுள்ள மாணவர்களையே தேர்ந்தெடுக்கின்றன. இதனால், மாணவர்கள் தங்களது அறிவுத்திறனை பெருக்கிக் கொள்ள வேண்டும்.

நாட்டின் வருங்காலம் இளைஞர்களின் கையில்தான் உள்ளது. மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். மேலும் வெளிநாட்டினர் நம் வளங்களுக்கு காப்புரிமை பெறுவதைத் தடுக்க வேண்டும். அதற்கு இங்குள்ள மாணவர்கள், நம்முடைய வளங்களுக்கு நாமே காப்புரிமை பெற முனைப்பு காட்ட வேண்டும் என்றார்.

இந்துஸ்தான் கல்வி அறக்கட்டளை தலைவர் டி.எஸ்.ஆர். கண்ணையன், செயலாளர் சரஸ்வதி கண்ணையன், கல்லூரி முதல்வர் என்.பாலுசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.





கோவை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று பட்டமளிப்பு விழா நடந்தது. இதில் 725 பேருக்கு பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் சுவாமிநாதன் பட்டம் வழங்கினர். பல்கலை தரப்பட்டியலில் இடம் பெற்றவர்களுடன் துணைவேந்தர், கல்லூரி சேர்மன் கண்ணையன், செயலாளர் சரஸ்வதி, முதல்வர் பாலுசாமி. அடுத்தபடம்: பட்டம் பெற்ற மாணவர்கள்.

# ஒழுக்கம் சார்ந்த கல்வி அவசியம்

## பாரதியார் பல்கலை துணை வேந்தர் பேச்சு

கோவை,பிப்.17: கோவை இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளை தலைவர் டி. எஸ்.ஆர். கண்ணையன் தலைமை தாங்கினார். பாரதியார் பல்கலைக்கழக துணை வேந்தர் சுவாமிநாதன், 525 இளங்கலை மாணவர்களுக்கும் 200 முதுநிலை மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். சாதனைபுரிந்த 27 மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக துணைவேந்தர் சுவாமிநாதன் பேசியதாவது:

மாணவர்கள் திறமையாளர்களாக உருவாக வேண்டும். ஒழுக்கம் சார்ந்த கல்வி அவசியம். வேதபுராணங்களில் இருந்து ஒழுக்கங்களை கற்பிக்க வேண்டும். ஆசிரியரை கொல்வது போன்ற செயல் கல்வி தருமத்திற்கு எதிரானது. இளம் மாணவர்களாகிய நீங்கள் எல்லாம் விழிப்புணர்வுடன் ஜூனியர் மாணவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்க வேண்டும். சக மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் அன்பாக பழக வேண்டும். எது நல்லது. எது கெட்டது என்பதை தாமாகவே சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். இதனால் உங்களது வாழ்க்கை, தொழில் மேம்பாடு அடையும். நல்ல மனித தன்மையை உருவாக்க வேண்டும். சமுதாயத்திற்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். நீதியை நிலைநிறுத்த வேண்டும்.

வேலையளிக்கும் நிறுவனங்கள் மாணவர்களிடம் திறமை, அறிவு, புத்திகூர்மை போன்றவற்றை எதிர்பார்க்கின்றன. உண்மையான கல்வி திறமை என்பது வாசித்தல், எழுதுதல், அறிவியல் அறிவை பெருக்குதலாகும். உயர்வை நோக்கி சிந்திப்பது, சிக்கல்களுக்கு தீர்வு காண்பது போன்றவை மாணவர்களுக்கு அவசியம். ஆங்கிலம் பேசும் திறமை மாணவர்களிடையே பெருக வேண்டும். தன்னம்பிக்கை, சுயக்கட்டுப்பாடு, நேர்மை, ஒற்றுமை, மற்றவர்களோடு ஒத்துப்போதல் போன்ற பண்புகள் மாணவர்களுக்கு தேவை. மாணவர்கள் தங்கள் முகவரியை உலகத்தில் பதிவு செய்ய மற்றவர்களிலிருந்து மாறுபட வேண்டும். வளர்ந்து வரும் உலகமயமாதலில் தரம் என்பது பொருட்களில், கல்வியில், ஆராய்ச்சியில் மற்றும் பல்வேறு நிலைகளில் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தியா உலகில் உயர்ந்து வரும் நாடு. இளைஞர்கள், பட்டதாரிகள் புதிய பல சாதனைகளையும், வெற்றிகளையும் தேசத்திற்கு சேர்க்க வேண்டும். அதன்வழியாக அவர்கள் வாழ்க்கை உயர வேண்டும்.

இவ்வாறு சுவாமிநாதன் பேசினார்.

கல்லூரி செயலாளர் சரஸ்வதி கண்ணையன் பேசினார். முன்னதாக கல்லூரி முதல்வர் என். பாலுசாமி வரவேற்றார். விழாவில், மாணவ, மாணவிகள் பெற்றோர்கள் திரளாக பங்கேற்றனர்.

தினகரன் 17-2-2012

# மூலிகை தாவர கருத்தரங்கம்

கோவை, பிப்.17: கோவை பாரதியார் பல்கலைகழகத்தின் தாவரவியல் துறை சார்பில் மனிதனும், மூலிகை தாவரங்களும் என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் 23, 24ம் தேதிகளில் நடக்கிறது. இதில் இந்திய அரசின் நறுமண பொருட்கள் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை விஞ்ஞானி நிர்மல் பாபு பேசுகிறார்.

இந்த கருத்தரங்கில் மூலிகை மருந்துகளின் மகத்துவம், மூலிகை வளர்ப்பு, ஆராய்ச்சி குறித்த விவரங்க்ளை அறிந்து கொள்ள முடியும். தாவரங்கள் அதன் பயன்பாடு குறித்த சொற்பொழிவு நடக்கிறது. இதில் தாவரவியல் துறை தலைவர் மணியன் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.